Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 மார்கழி (06 - 12 - 1990) வியாழக்கிழமை ஓசை 281

## தொண்டர் ஆசிரியருக்கு 14 இல் நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்குரிய நேர்முகப்பரீட்சை இந்த மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் இந்தநேர்முகப் பரீட்சைக்குரிய அழைப்புக் கடிதங்களை சகல பரீட்சார்த்திகளும் தத்தமது கோட்டக் கல்வி அலுவலகங் (4ஆம் பக்கம் பார்க்க)

# அரசியலில் ராணுவ தலையீடு!

# சிறிலங்கா அரசாங்கம் அச்சம்

## உயர் இராணுவ அதிகாரிகள் மீது கட்டுப்பாடு

(கொழும்பு)

அரசியலில் இராணுவ அதிகாரிகளின் தலையீடு அதிகரிப்பால் அச்சமடைந்துள்ள சிறிலங்கா அரசாங்கம் இராணுவ உயர் அதிகாரிகள் வெகுசனத் தொடர்பு சாதனங்களுடன் தொடர்பு கொள்வதற்குத் தடை விதித்துள்ள அதேவேளை இராணுவ அதிகாரிகளுக்கு அதி முக்கியத்துவம் கொடுத்துப் பத்திரிகைகள் செய்திகளைப் பிரசுரிக்க வேண்டாம் என எச்சரிக்கை செய்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கொழும்புத் தினசரிகளில் சமீபகாலமாக அதிகளவு முக்கியத்துவத்தைப் பெற்றுவந்ததால், சிங்களமக்கள் மத்தியில் பிரபல்யமடைந்துள்ள சிறிலங்கா இராணுவ உயர்மட்ட அதிகாரியானமேஜர் டென்சில் ஹொப்பேக்கடுவாவின் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் சிலதடைகளை விதித்துள்ளது.

கண்டியை ஜென்மபூமியாகக் கொண்ட பௌத்த சிங்களவரான மேஜர் டென்சில் இராணுவச் சதியொன்றை மேற்கொள்வதற்கான அனைத்துத் தகுதிகளும் பெற்றவர் என்பதற்காகவே அவரது செயற்பாடுகள் சில, அரசாங்கத்தினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனவாம். கடந்த இரண்டு மாத காலங்களாக அவரைப் பற்றிய செய்திகளைக் கொழும்புப் பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்துள்ளன. அவர் ஈழப்போரில் காலொன்றை இழந்து சிகிச்சைக்காக லண்டன் நகர் சென்றுள்ளதாகவும் அரசாங்கம் முக்கிய கருமம் ஒன்றிற்காக அவரைப் பாகிஸ்தான் அனுப்பியுள்ளதாகவும் நாட்டின் பல பகுதிகளிலும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா இராணுவத்திற்கு பன்றியும் புலியாகத் தெரிகிறது

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியில் இருந்து பூந்தோட்டம் சந்தைப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர், இரவுவேளையில் கடைகளில் உறங்கிக்கொண்டிருந்த பல இளைஞர்களைக் கைதுசெய்து காட்டுப் பாதை வழியாகத் தாண்டிக்குளம் கொண்டுவர முயற்சிசெய்தனர்.

தாண்டிக்குளம்குளக்கட்டிற் கண்மையில் வந்த இராணுவத்தினர், 'விடுதலைப் புலிகள் எங்கே இருக்கிறார்கள்?' என்று கூட்டிக்கொண்டுவந்த இளைஞர்களை நோக்கிக் கேட்டனராம்.

மிக அருகில்தான் புலிகள் இருக்கிறார்கள் என்று இளைஞர்கள் கூறியதை அடுத்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படையினரிடம் இருந்து நவீன ஆயுதங்கள் மீட்பு

(அம்பாறை)

பாணமை இராணுவ முகாமில் இருந்து பொத்துவில் நோக்கி ஒரு ஜீப்பில் வந்த விசேட அதிரடிப் படையினர் மீது தாம் மேற்கொண்ட தாக்குதலில் ஏழு அதிரடிப் படையினர் கொல்லப்பட்டதாகவும், அவர்களிடமிருந்து பல ஆயுதங்களையும் தாம் கைப்பற்றி உள்ளதாகவும், அவர்கள் பிரயாணம் செய்த வாகனம் சேதமாக்கப்பட்டதாகவும் 'விடுதலைப்புலிகளின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது. அதேவேளை இந்தத் தாக்குதலில் தமது தரப் (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக் கழகத்திற்கு வெளிவாரி மாணவர்களுக்கு பரீட்சை நடாத்த அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைகழக மூதவை தொடர்ந்து விண்ணப்பித்து வந்ததால் வெளிவாரிபரீட்சைகளை நடாத்துவதற்கும் வெளிவாரி மாணவர்களை சேர்த்து கொள்வதற்கும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துக்கு தற்போது அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

வெளிவாரிப் பரீட்சைகளை கடந்த காலங்களில் கண்டி பேராதனை பல்கலைக் கழகமே நடாத்தி வந்தது. பேராதனையில் தயாரிக்கப்பட்ட பாடதிட்டத்திற்கேற்ப வடபகுதி தமிழ் மாணவர்கள் பரீட்சைகள் எழுதிவந்தனர் வினாத்தாள்களும்பேராதனையிலேயே தயாரிக்கப்பட்டன.

ஆனால் இப்பொழுது யாழ். பல்கலைக்கழக மூதவை அடிக்கடி கூடி தமக்கு இந்த அதிகாரம் வழங்கப்படவேண்டும் என தொடர்ச்சியாக தீர்மானம் இயற்றி, பல்கலைக்கழக (4 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த.சாதாரண பரீட்சைக்கு டிச.9 வரை விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் பாடசாலை மாணவர்கள் மேற்படி பரீட்சைக்கு இந்த மாதம் 9-ஆம் திகதிவரைவிண்ணப்பிக்கலாம்

எனினும் இந்தப் பரீட்சை யாழ். மாவட்டத்தில் எப்போது நடைபெறும் என்பது பற்றிஇதுவரை தீர்மானிக்கப் படவில்லை. (க)

## இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் தற்காலிக இடமாற்றம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் நடைபெறும் அசம்பாவிதங்களால் இடம்பெயர்ந்திருக்கும் ஆசிரியர்கள் தாம் தங்கியிருக்கும் இடங்களிலேயே தற்காலிக இடமாற்றத்தினை பெற்றுக் கொள்ளலாம் என கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இடம்பெயர்ந்திருக்கும் இடங்களில் உள்ள வட்டார கல்விக் காரியாலயங்களுக்கு சென்று ஆசிரியர்கள் இந்த இடமாற்றத்தினை பெற்றுக் கொள்ளலாம் என கல்வி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

ஆனால் இதுவரை எந்தவித (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணம் சுனில், ராஜா

(அம்பாறை)

அம்பாறையில் பாணமை அதிரடிப்படையினருடனான மோதலில் சுனில் (சின்னத் தம்பி - அருளைமநாயகம், கோணாவில் அக்கரைப்பற்று) ராஜா (சேனைக்குடியிருப்பு) ஆகியோர் வீரமரணம்அடைந்தனர். இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## திருக்கோவிலில் கண்ணிவெடி; வாகனம் முற்றாகச் சேதம்

(அம்பாறை)

திருக்கோவில் இராணுவ முகாமிலிருந்து வந்த கவச வாகனம் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கியது. இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 7-30 மணியளவில் வாக்குசார் வீதியில் வந்து கொண்டிருந்த கவச வாகனம் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி முற்றாகச் சேதமடைந்துள்ளது.

## வவுனியாவில் இரு பெண்கள் இராணுவத்தால் மானபங்கம்

(வவுனியா)

வவுனியாவில் இரு தமிழ்ப் பெண்கள் இராணுவத்தினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு மானபங்கப்படுத்தப்பட்டனர்.

கடந்த மாதம் 21ஆம் திகதி இந்தச்சம்பவம்இடம்பெற்றது மேற்படி சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: சம்பவம் இடம்பெற்ற தினம் வவுனியா குருமன்காடு பகுதியில் உள்ள தமது வீட்டைப் பார்ப்பதற்காக குறிப்பிட்ட இரு பெண்களும் சென்றபோது அவர்களை விசாரணைக்கு வரும்படி அழைத்த இராணுவத்தினர் மானபங்கம் செய்துள்ளனர்.

குறிப்பிட்ட இரு பெண்களும் சகோதரிகள் என்றும் இவர்களில் மூத்தவர் வவுனியா பாடசாலை ஒன்றில் ஆசிரியையாகப் பணிபுரிபவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மானபங்கப்படுத்தப்பட்ட இரு சகோதரிகளில் ஒருவருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. (தி)

## கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து சித்தஆயுர்வேத வைத்தியத்துறையின் தரமும் உயர்த்தப்பட்டுள்ளது

இதனைத் தொடர்ந்து அங்கு 30 படுக்கைகளைக் கொண்ட 5 வார்ட்டுகள் அமைக்கப்படும் என்றும், ஒவ்வொரு வார்ட்டுக்கும் ஒவ்வொரு வைத்திய ஆலோசகர்கள் நியமிக்கப் படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மீண்டும் "சிரித்திரன்"

(யாழ்ப்பாணம்)

நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும் சிரித்திரன் மாதஇதழ் வெளியாகியுள்ளது பாரிசவாத நோயின் மத்தியிலும் தனது அயராத முயற்சியினால் திரு. சிவஞானசுந்தரம் (சுந்தர்) அவர்கள் இந்த இதழை வெளியிட்டுள்ளார். (மு)

## அகதி முகாம்களுக்கென புதிய நிவாரணத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களுக்கான புதிய நிவாரணத்திட்டம் ஒன்றை இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் நடைமுறைப்படுத்த உள்ளது.

இந்த நிவாரணத் திட்டத்திற்கான முதல் கட்ட நடவடிக்கையாக அகதிமுகாம்களுக்கு இதுவரை கிடைத்த அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் பற்றி தகவல் திரட்டப்பட்டு வருகிறது. இந்தத் தகவல்களைக் கொண்டே இந்த நிவாரணத் திட்டம் பற்றிய தீர்மானம் எடுக்கப்படும் என்று செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

## வரிவிளம்பரம்

### தேவை

பழுதான விளாம்பழங்கள் விதைக்குத் தேவை. விலை கொடுக்கப்படும். மில்க்வைற்-யாழ்ப்பாணம். (B-1674)

### லைடன் ரெக்ஸ்'ரையில்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினாக்ஸ் கம்பனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன் புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (B-1656)

### போட்டோஸ்ரட்

'ஸ்கைலைன்ஸ்'

தரமான போட்டோஸ்ரட் றோணியோ வேலைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள். 281 B, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். 'SKYILINES'281,B,Clock TowerRoad, Jaffna. (ஏஜென்சி தபால் கந்தோர் அருகாமை) (B/1662)

**The Jaffna Education Centre**

யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்) O/L. A/L Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியும் உண்டு. (B-1657)

### டில்கா வாச் வேக்ஸ் DILKA WATCH WORKS

வாடிக்கையாளர்களுக்கு! எமது ஸ்தாபனம் மீண்டும் 404, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன்பாகவும், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும், ஆடியபாதம் வீதி கல்வியங்காட்டிலும் இயங்குகின்றன. சகல மணிக்கூடுகளும். றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. B/1653)

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல 256 A பருத்தித்துறை வீதி நல்லூர். ''அரஸ்ஜவுளியகம்'' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (R/888)

### மூளைக் காய்ச்சலால் சிறுமி பலி

மூளைக்காய்ச்சல் நோய் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஆறுகால் மடத்தைச் சேர்ந்த பரமசிவம் சுயேந்தினி (வயது 5) என்ற சிறுமி கடந்த செவ்வாயன்று மரணமானார். (ச)

### அறிவித்தல்

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் 3-12-90 இல் எடுத்த தீர்மானத்தின்படி சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டுஇருப்பதால் அத் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. மீறுவோர் மீது சங்கத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படிக்கு
காரியதரிசி.

(R/905)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்

**G.A.Q, B.A 90, 91**

விரிவுரைகள் மீண்டும் 8-12-90 அன்று ஆரம்பமாகின்றன என்பதனை எமது நிலைய மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**SPOKEN ENGLISH**

வகுப்புகளும் ஆரம்பமாகின்றன

-நிர்வாகி

(B/1670)

## வீரமரணம்



| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 1973 | 1990 |
| – | – |
| 02 | 11 |
| – | – |
| 02 | 22 |

### வீரவேங்கை பூங்குயில் (மா. சாந்தினி)

22-11-90 அன்று பலாலியில் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

இவர் மாரிமுத்து சிந்தாமணி தம்பதிகளின் அன்பு மகளும் கௌரி, பரிமளகாந்தி வீரமரணமடைந்த திருச்செந்தூர் ஆகியோரின் சகோதரியும் ஆவார்:

தகவல்:
மா. கௌரி

735, சுவிச் சென்ரர்,
வட்டக்கச்சி.

(B/1658)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

திருநெல்வேலி சிவன் கோயிலுக்கும் அம்மன் கோயிலுக்குமிடையில் 4.12.90 அன்று கைச்சங்கிலி ஒன்றுகண்டெடுக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டி கீழுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளவும்.

இ. உமாதினி
நியு லக்கி ஸ்ரார் ஜுவலறி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(R-903)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

23-10-1990இல் பலாலி இராணுவத்தினருடன் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட

# கப்டன் றேமன்

(சீதாராம்)

வீரஜனனம்: 09-04-1968 வீரமரணம்: 23-10-1990

சுதந்திரப் பூக்களின்
சுகந்தத்திற்காக
வீட்டிலிருந்து
புறப்பட்ட மக்கள் நேசனே!

நீ
அடக்குமுறையை
அடக்க நினைத்தவன்
அடங்குவதென்பது அடிமைத்தனம் என்றாய்!

சந்ததியின் சந்தர்ப்பம் கெட்டுவிடும்
என்பதற்காக
காதல் உணர்வுகளை
கால்வாயினுள் புதைத்து விட்டு
துப்பாக்கியை மட்டுமே நீ
நேசிக்க ஆரம்பித்தாய்!

''கர்ப்பத்தில் இருக்கும் போதே
உன்தாய் சுதந்திரத்தமிழீழம்
பற்றிக் கனவுகள்
கண்டிருந்தாளோ?''

மரணம் வாழ்வின் முடிவல்ல;
வீரமரணம் மட்டுமே
நிலைக்குமென்று
பலாலி நோக்கி
பாய்ந்து சென்றாயோ!

தியாக சீலர்கள் சிந்திய
இரத்தத்தில் மட்டுமே
தமிழீழம் நாளை விருட்சமாகும்!
நீ சிந்திய உதிரம்
இதற்கு உரமாகும்

இவனுக்குப் பின்னால் நான் மட்டுமல்ல
நீங்களும் தான்
துப்பாக்கியோடு நிற்கிறீர்கள்!

அம்மா, அப்பா, சின்னம்மா,
தங்கை, தம்பி, மாமா, மாமி,
நண்பர்கள்.

பருத்தித்துறை.

(B 1673)



## சிந்தனைக்கு

கல்விக்கு ஒரே ஒரு குறிக்கோள் மட்டுமே இருக்கமுடியும். அது வீரம் ஊட்டுவதே.

— ஆல்பிரெட் ஆட்லர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# புத்திஜீவிகளின் பங்கு எம் இனத்திற்கு அவசியம்

பங்களாதேஷில் அதிபர் எர்ஷாட்டிற்கு எதிராக நடந்த தொடர்ச்சியான போராட்டத்தினால் ஆட்சியில் தொடர்ந்தும் இருக்க முடியாமல் எர்ஷாட் தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார்.

பங்களாதேஷ் பாகிஸ்தானிடம் இருந்து சுதந்திரம் பெற்றதில் இருந்து நிலையான ஆட்சி ஒன்று நிறுவப் படாததோடு, குழப்பமான அரசியல் நிலைவரமுமே இருந்து வந்தது. சுதந்திரம் பெற்றபோது பாராளுமன்ற முறை ஜனநாயக ஆட்சி ஒன்று அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அனேக இஸ்லாமிய நாடுகள் போன்று மாறி மாறி இராணுவ ஆட்சி நிலைப்பதற்கே வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

அரசுக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ச்சியாக நடந்த வண்ணமே இருந்தன. ஆனால் எதிர்க்கட்சியினர் பலதாகப் பிரிந்து செயற்பட்டமையால் இராணுவ ஆட்சியாளர்களுக்கு அவர்களைக் கையாள்வது சுலபமாக இருந்து வந்தது. இருப்பினும் போராட்டம் வளர்ச்சிப் போக்கில் புத்திஜீவிகளையும், மாணவர்கள், தொழிலாளர்கள் போன்ற சகலரையும் உள்ளடக்கியமையால் எர்ஷாட் பதவி விலகுவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

பங்களாதேஷ் விடுதலைப் போரின் போதும் சரி, இன்றைய ஆட்சி மாற்றத்தின் போதும் சரி அதில்பல்கலைக் கழக புத்திஜீவிகளினதும், மாணவர்களினதும் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். விடுதலைப் போராட்டத்தில் புத்திஜீவிகளின் பங்குகாரணமாக அவர்கள் மீது ஆத்திரம் கொண்ட பாகிஸ்தான் இராணுவம் அன்று டாக்கா பல்கலைக் கழகத்தினுள் புகுந்து அறுபது பேராசிரியர்களைச் சுட்டுக் கொன்றது. தற்போதைய ஆட்சி மாற்றத்திலும் இந்த புத்திஜீவிகளின் பங்கு குறைந்து விடவில்லை.

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏழு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதேவேளை அரசாங்கம் பல்கலைக் கழகத்தை மூடியதை அறிவித்த போதும் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர்களால், விரிவுரைகள் நிகழ்த்தப் பட்டன. மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.

இவ்வாறு அரசுக்கு எதிரான போராட்டங்களில் புத்திஜீவிகளும், மாணவர்களும் பங்குபற்றுதல் என்பது பங்களாதேஷிற்கு மட்டும் உரிய விசேட பண்பல்ல. உலகின் பலபாகங்களிலும் நடந்த போராட்டங்களில் இது வெளிப் பட்டுள்ளது. இதை சிறிலங்கா அரசாங்கமும் தெளிவாக உணர்ந்துள்ளது. இதனாலேயே இருவருடங்களுக்கு முன் தென்னிலங்கையில் ஜே.வி.பியினரின் கிளர்ச்சி புத்துயிர் பெற்ற போது புத்திஜீவிகளுக்கு எதிர்பாராதளவு சலுகைகளை வழங்கி தனது கைக்குள் வைத்துக்கொண்டது சிறிலங்கா அரசாங்கம்.

ஆனால், தமிழரின் தேசியப் போராட்டத்திற்கு தமிழ் புத்திஜீவிகளின் பங்களிப்பு மிகவும் குறைவு என்றே சொல்லவேண்டும். போராட்டச் சூழலில் இருந்து விலகி வாழ்வதையே புத்திஜீவிகள் விரும்புவதுபோல் தெரிகின்றது.

ஆனால், இன்று எமது போராட்டத்திற்கு புத்திஜீவிகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். விஞ்ஞான ரீதியானதும், தொழில்நுட்ப ரீதியானதுமான கண்டுபிடிப்புக்கள் இன்று எமது இனத்தின் விடுதலைக்கு அத்தியாவசியமாகின்றது.

விடுதலைப் புலிகளின் சில இராணுவ தளபாடக் கண்டுபிடிப்புகள் சிறிலங்கா இராணுவத்தினருக்கு பெரும் தொல்லை கொடுக்கும் தளபாடங்களாக அமைந்துள்ளதோடு, அவர்களை முகாம்களைவிட்டு வெளியேற்றியும் உள்ளது. இதேபோன்ற கண்டுபிடிப்புக்கள் சகல துறைகளுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும்.

சிறிலங்கா அரசாங்கம் தமிழ்ப் பிரதேசங்களின் முழுப் பொருளாதார நடவடிக்கைகளையும் முடக்கி வைக்க எண்ணுகின்றது. கண்துடைப்பிற்காக அரை, கால் வயிற்றிற்கு போதுமான உணவு மட்டும் அனுப்புகின்றது. நோய்க்குப் போதிய மருந்து அனுப்புவதையும் தவிர்த்து வருகின்றது.

இந்நிலையில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் துரைராசா அவர்கள் குறிப்பிட்டதுபோன்று பல்கலைக்கழகம் இனத்தையும் பிரதேசத்தையும் முன்னேற்ற முழுமையாக ஈடுபடவேண்டும். அவை மக்களின் நலனுக்காக உழைக்க வேண்டும். இதன்மூலம் எமது நீர்வளம், நிலவளம், கடல்வளம் ஆகியவற்றை விருத்தி செய்து எமது வளத்திலேயே நாம் தங்கிவாழும் நிலை ஏற்பட வேண்டும்.

## பதின்மூன்றாவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களின் பதின்மூன்றாவது நினைவு தினம் வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நல்லூரில் உள்ள கம்பன் கோட்டத்தில் நடைபெறும்.

கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரையின் தலைமையில் நடைபெறும் இந்நினைவு தினக் கூட்டத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம், திரு க. சொக்கலிங்கம் ஆகியோரும் பல கலைஞர்களும், எழுத்தாளர்களும் உரையாற்றுவார்கள்.


தம்பலவத்தையிலிருந்து திரும்பியதும் மேலும் பல இடங்களுக்குச் சென்றோம். அகதிகள் நிலை கண்ணீர்க் கதையாகவே தொடர்ந்தது. மண்டூர் போன்ற இடங்களிலும் ஏராளமான அகதிகள் இருந்தனர். அவர்களிடமிருந்து பல தகவல்களைப் பெற்றுக்கொண்டோம். கொக்கட்டிச் சோலைப்பகுதிக்கு திரும்பி வந்தோம். பலரோடு உரையாடியதில் செப்டெம்பர்மாதம் ஐந்தாம் திகதி இராணுவத்தினர் புல்லுமலையில் ஆறுபேரைக்கைது செய்து கொண்டு போகையில் அதில் மூவர் தப்பிச் சென்றதாகவும் அதனையடுத்து எஞ்சிய மூவரையும் சுட்டுவிட்டு, தப்பிய மூவரைத் தேடிச் சென்றனர் தனை பெண்களுமே கற்பழிக்கப்பட்டனர் என்ற தகவலைத் தெரிவித்தனர். ஏற்கனவே இப்பகுதியில் இருந்து வெளியேறி வேறு இடங்களில் இருந்தோர் மட்டுமே நாம் இந்தக் கிராமத்தைச் சேர்ந்

## 32

தவர்கள் என்று சொல்லமுடியும். சம்பவம் நடந்தபோது ஊரில் இருந்த அனைவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். எனவே அரசாங்க அதிபரும் இராணுவத் தளபதியும் இங்கிருந்து வெளியேறியவர்களை திரும்பவும் இங்கே குடியமர்த்த முயற்சிகள் மேற்கொண்டபோது அவர்கள் நடந்த சம்பவத்தின் கோரம் நெஞ்சைவிட்டு அகலாத நிலையில் இருக்கும் போது தாம் மீளக்குடியமர்தல் சாத்தியமில்லை என்று தெரிவித்துவிட்டார்கள்.

கொக்கட்டிச்சோலையில் இருந்து புறப்பட்டு மட்டக்களப்பு வின்சன் உயர்தர மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் மதி என்ற மாணவியை எட்டு இராணுவத்தினர் கற்பழித்ததாகவும் குறிப்பிட்டார். மட்டக்களப்பில் உள்ள 44 முகாம்களில் சிலவற்றையே எம்மால் பார்க்க முடிந்தது. அங்கிருந்து புறப்பட்டு திரு. மாத்தயாவைச் சந்திக்கச் சென்றோம். நாங்கள் அகதிகளைப் பார்க்கப் போயிருந்த சமயம் திரு. மாத்தயா அவர்கள் வேறு பல இடங்களுக்குச் சென்று நிலைமைகளை அவதானித்தார். பலரிடமும் அபிப்பிராயங்களைக் கேட்டார். பின்னர் போராளிகளுடன் ஆலோசித்தார். இந்த விடயங்களை உடனுக்குடன்

உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



என்றும் அப்போது ஐந்து பெண்களைக் கற்பழித்துக் கொன்று கிணற்றில் போட்டனர் என்றும் கேள்விப்பட்டோம்.

இன்னொரு இடத்தில் விசாரித்தபோது சொறிக்கல்முனை வாசிகள் சவளக்கடை அகதிகள் முகாமில் இருந்தபோது செப்டெம்பர் மாதம் பதினேழாம் திகதி முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இராணுவமும் இந்த முகாமினுள் புகுந்து முப்பத்தைந்து ஆண்களையும், முப்பத்தைந்து பெண்களையும் கைதுசெய்து கொண்டு போனதாகவும் ஆண்களை இராணுவமுகாமில் வைத்து வெட்டிக் கொன்றதாகவும், பெண்களை அகதிகள் முகாமுக்கும் இராணுவ முகாமுக்கும் இடையில் வைத்து கற்பழித்துக் கொன்றதாகவும் அறிந்தோம்.

அதேபோல செப்டெம்பர் இருபத்தோராம் திகதி புதுக்குடியிருப்புப்பகுதிக்கு சென்ற முஸ்லிம் ஊர்காவல் படையினர் அங்கு சுமார் 17 பேரை வெட்டிக் கொன்றதாகவும் 15 பேரை வெட்டிக் காயப்படுத்தியதாகவும் ஆறு பெண்களைக் கற்பழித்ததாகவும் அறிந்தோம். பாலமுனை என்ற சிறிய முஸ்லிம் கிராமத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு நடந்து கொண்டவர்களென அறிந்தோம். பாலமுனைக்கிராமம் ஒரு சிறிய கிராமமாக இருந்தாலோ என்னவோ ஏற்கனவே நடைபெற்ற தமிழ், முஸ்லிம் கலவரங்களில் இவர்கள் சம்பந்தப்படுவதில்லை. இன ஐக்கியத்துக்காக முயற்சிப்பவர்கள். இவர்கள் கூட இப்படியான செயல்களில் இறங்கியது வியப்பாக இருந்தது.

நடந்த தமிழ் இனப்படுகொலைச் சம்பவங்களுக்குள் சத்துருக்கொண்டான் சம்பவமே மிகப் பெரியதாக இருந்தது. பிள்ளையாரடி, சத்துருக்கொண்டான் போன்ற பகுதிகளை முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இராணுவமும் சுற்றிவளைத்து மொத்தம் 217பேரைக் கொன்றிருக்கிறார்கள். இதில் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளும் அடங்கும். கற்பழித்துக் கொலை செய்யப்பட்ட பெண்களின் சடலங்கள் 37 கிணற்றில் காணப்பட்டன. ஐந்துக்கும் குறைவானவர்களே இச்சம்பவத்தில் தப்பி வெளியே வந்தனர். அந்தப் பெண்களும் கற்பழிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள்தான் பிடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட அத்

ஏற்கனவே அங்கிருந்து வெளியேறியோர் மட்டுமே சத்துருக்கொண்டான் படுகொலையிலிருந்து தப்பியவர்கள். கொல்லப்பட்ட 217 பேரில் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளும் அடங்கும். பிடிக்கப்பட்ட அனைத்துப் பெண்களுமே கற்பழிக்கப்பட்டார்கள். இவ்வாறு கற்பழிக்கப்பட்ட 37 பெண்களின் சடலங்கள் கிணறுகளில் காணப்பட்டன.

இருந்து புறப்பட்டு பன்குடாவெளிப் பகுதிக்கு வந்தோம். அங்கே ஒருவரைச் சந்தித்த போது தான் தளவாய்க் கிராமத்தைச் சேர்ந்தவரெனவும் செப்டெம்பர் மாதம் இருபதாம்திகதிதமது கிராமத்தைச் சேர்ந்த ஆண்கள் பெண்கள், குழந்தைகள் அடங்க 32பேரை முஸ்லிம் ஊர்காவல்படையினரும் இராணுவத்தினரும் சுட்டும் வெட்டியும் கொலை செய்ததாகவும் ஏழு வள்ளங்களுக்கும், வீடுகளுக்கும் தீ வைத்ததாகவும் குறிப்பிட்டார்.

இன்னொருவர் தான் புன்னைச்சோலையிலிருந்து வந்திருப்பதாகவும் தமது ஊரில் ஜூலை மாதம் இருபதாம் திகதியன்று ... தலைவருக்கும் தெரியப்படுத்தினார், தலைவர் திரு. மாத்தயா அவர்களை உடன் வருமாறு அழைத்தார், எனவே அக்டோபர் மாதம் 12 ஆம் திகதி திரு. மாத்தயா அவர்கள் நாளை நாங்கள் திரும்பிப் புறப்படப் போகிறோம். அம்பாறை மாவட்டத்தை எல்லாம் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று தான் புறப்பட்டு வந்தேன். எனினும் தலைவர் அழைப்பதால் திரும்பிச் செல்வோம் என்றார்.

போராளிகள், பொது மக்களுடன் கலந்தாலோசித்ததில் இருந்தும் நிலைமையை நேரில் கண்டதில் இருந்தும் அடுத்த நடவடிக்கைகள் பற்றிய சில முடிவுகளுக்கு வந்துவிட்டார் என்றே கூறலாம். கிழக்கு மாகாணம் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு கிழக்கிலேயே முடிவெடுக்கப் பட்டது. அன்று இரவு சில இடங்களைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டார் மாத்தயா.

(தொடரும்)

## மாங்குள மக்கள் வங்கியை இயங்க வைக்க முயற்சி

(மாங்குளம்)

மாங்குளம் மக்கள் வங்கிக் கிளை செயற்படத் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

மாங்குளம் சிறிலங்கா இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப் பட்டதைத் தொடர்ந்தே இந்த வங்கிக்கிளை இயங்கக் கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

இந்த வங்கி அலுவலகத்தை பார்வையிடுவதற்கும் இயங்க வைப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்த வங்கிக்கிளையின் முகாமையாளரும் ஏனைய அதிகாரிகளும் தற்போது ஆலோசித்து வருகிறார்கள்.

கடந்த பல மாதங்களாக மாங்குளம் சிறிலங்கா இராணுவத்தினரின் கெடுபிடி காரணமாக இந்த வங்கிக்கிளை இயங்க முடியாத நிலையில் இருந்துவந்தது. (ச)

## அன்னை ஸ்ரீ சாரதாதேவி ஜெயந்தி!

அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 138ஆம் ஜெயந்தி விழா வரும் எட்டாம் திகதி, சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் உள்ள இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறவுள்ளது.

# இலங்கைத் தமிழர் கொல்லப்படுவது அதன் உள்நாட்டுப்பிரச்சினையல்ல

## தமிழக கிறிஸ்தவ திருச்சபை அறிக்கை

(சென்னை)

ஈழத்தமிழர் பிரச்சினையை இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்று இந்திய அரசாங்கம் ஒதுக்கி வைக்கலாம். ஆனால் மனிதர்கள் அங்கு வகை தொகை இன்றிக் கொல்லப்படுவது ஒரு மனிதப் பிரச்சினை. இந்த நிகழ்வுகளை சிறிலங்காவின்உள்நாட்டு விவகாரம் என்று நாம் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது.

இவ்வாறு தமிழகத்தில் அகதிகள் நிலைபற்றிய எமது அறிக்கை என்ற வெளியீடு ஒன்றில் சிறிலங்கா அகதிகள், புலம் பெயர்ந்தோருக்கான கிறிஸ்தவ திருச்சபை அமைப்பு தெரிவித்துள்ளது.

மனித வர்க்கத்தின் கௌரவமும், மனிதநேயமும் மீறப் படும்போது இயேசுவினுடைய தான திருச்சபை பார்வையாளராக இருக்க முடியாது என்று மேற்படி அமைப்பின் நிர்வாக இயக்குநர் யேக்கப் பெலி கைச்சாத்திட்ட அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

## போபர்ஸ் கணக்குகள் இந்தியாவிடம் ஒப்படைப்பு

(டில்லி)

போபர்ஸ் பேர ஊழல் தொடர்பாக சுவிஸ் வங்கியில் முடக்கப்பட்ட ஏ. ஈ. சர்விஸ் நிறுவனக் கணக்கு விபரங்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

சுவிஸின் நீதித் துறையையும், பொலிஸ் துறையையும் சேர்ந்த அதிகாரிகள் பேர்லினில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் இந்த ஆவணங்களை ஒப்படைத்ததாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

போபர்ஸ் பேரத்தில்கமிஷன் தரப்பட்டதற்குச் சாட்சியமாக சுவிஸ் வங்கியின் ஆவணங்களை இந்தியா பெறுவது இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## பொலிஸ் தலைமையகம் தப்பி ஓடிய கேர்ணல் வசம்

(பனாமா)

பனாமாவில் சிறையிலிருந்து நேற்று இரவு தப்பியோடிய முன்னாளைய பொலிஸ் தலைவர் கேர்ணல் எட்வார்டோ டெனாரேடோ பனாமா நகரிலுள்ள பொலிஸ் தலைமையகத்தை கைப்பற்றியுள்ளார். பனாமா அரசுத் தலைவர் நிலமோ அவர்கள் உடனே அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளார். இப்போது அமெரிக்கப் படைகள் அந்தத் தலைமையகத்தைச் சுற்றி வளைத்துள்ளன. ஓர் ஆண்டுக்கு முன்னர் அரசுத் தலைவர் நொறீக்காவை அமெரிக்கா பதவியில் இருந்து நீக்கியது. தற்போதைய அரசுக்கெதிராகச் செயற்பட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருந்த கேர்ணல் எட்வார்டோ நேற்றிரவு சிறையிலிருந்து ஹெலிகொப்ரர் மூலம் தப்பிச்சென்றார். அரசின் குற்றச்சாட்டுகளை அவர் முற்றாக மறுத்துவிட்டார்.

## சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பல நோ. கூ. சங்க, தெங்குப் பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூ. சங்க, ஏனைய கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களை நாளைக் காலை 10.00 மணிக்கு கோண்டாவில் மாதிரி நிர்வாக செயலகத்திற்கு வருகை தருமாறு கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளார்கள்.

## நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

நிறுத்தல் அளவைகளுக்கு எதிர்வரும் 10ஆம் திகதிமுதல் 21ஆம் திகதி வரை மானிப்பாய் பிரதேச சபைக் காரியாலயத்தில் காலை 8.30 மணிமுதல் மாலை 2.30மணி வரை முத்திரை வைக்கப்படுமென உள்நாட்டு உதவி வர்த்தக ஆணையாளர் அறிவித்துள்ளார்.

சகல வர்த்தகர்களும் தங்களது நிறை அளவைகளை முத்திரையிடுமாறு அவர் கேட்டுள்ளார்.

**தொண்டர்**

களில் அடையாள அட்டையைக் காண்பித்து இம்மாதம் 11ஆம் திகதி பெற்றுக்கொள்ளலாம்.

தொண்டர் ஆசிரியர்களின் இரகசிய அறிக்கைகளை இதுவரை சமர்ப்பிக்காத பாடசாலை அதிபர்கள் உடனடியாக அவற்றைச் சமர்ப்பிக்கும்படி யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

**சிறிலங்கா**

அனைவரையும் பற்றைகளில் படுத்திருக்கும்படி கூறிய இராணுவத்தினர் தாமும் பற்றைகளின் நடுவே படுத்துவிட்டனராம்.

இந்தச்சமயம் காட்டுப் பன்றி ஒன்று ஓடிய சத்தத்தைக்கேட்ட இராணுவத்தினர் விடுதலைப்புலிகள் தாக்க வந்துவிட்டனர் என எண்ணி கைதுசெய்து அழைத்து வந்த இளைஞர்களை விட்டு விட்டு பூந்தோட்டம் பகுதியை நோக்கி ஓடிவிட்டனராம்.

தகுந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட இளைஞர்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தை நோக்கி ஓடிவந்துவிட்டனராம்.

இவ்வாறு இராணுவத்தினரிடமிருந்து தப்பிவந்த கண்ணன் என்னும் இளைஞர் இந்தத் தகவலை ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

இதேசமயம் பூந்தோட்டம் பகுதியில் கைது செய்யப்பட்டு ஒருநாள் முழுவதும் கட்டி வைக்கப்பட்டிருந்த சுப்பிரமணியம் ரவிச்சந்திரன், ஞானம் என்று அழைக்கப்படும் கூட்டுறவுக்கிளை முகாமையாளர் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். (தி)

**வெளிவாரி**

மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பிக் கொண்டிருந்ததால் இறுதியாகமுதலைவையின்முயற்சி வெற்றியளித்துள்ளது.

இந்த அதிகாரம் வழங்கப்பட்டதை தொடர்ந்து வெளிவாரி மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தினுள் விரிவுரைகளுக்கு சமுகம் தரக்கூடிய வகையிலும் உள்ளே விரிவுரைகளில் சமுகமளித்து கொண்டிருக்கும் உள்வாரி மாணவர்களும் தமது கல்வி ஆண்டுகளின் இடையேவேலை ஒன்று கிடைக்குமிடத்து தொடர்ந்து தமது விரிவுரைகளை வெளிவாரி மாணவர்களுடன் தொடரக்கூடிய முறையில் பாடத்திட்டத்தைதிருத்தியமைக்கும் விதம்பற்றி பல்கலைக் கழகம் விரைவில் தீர்மானிக்க உள்ளது. இத்துடன் விரிவுரைகளுக்கு நேரடியாக சமுகம் தரமுடியாத மாணவர்களுக்கு அஞ்சல் முறைக்கல்வியை ஆரம்பித்து விரிவுரையாளர்களுக்கும் மாணவர்களுக்குமிடையில் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. (லோ)

**இடம் பெயர்ந்த**

சுற்றறிக்கையும் வரவில்லை என வடமாநில கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள கல்வித் திணைக்களம் அறிவித்த போதும் இதுவரை தமக்கு எந்த வித அறிக்கையும வரவில்லை என தெரிவிக்கின்றது.

**அரசியலில்**

வதந்திகள் அடிபடலாயின.

மேஜர் டென்சில் ஹொப் பேக்கடுவாவுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கான காரணங்களில் ஒன்று அவர் பிரான்சு நாட்டுச் செய்தி நிறுவனமான ஏ. எவ். பிக்கு வழங்கிய பேட்டியாகும். அந்தப் பேட்டியில், ஈழப்போருக்கு அரசியல் ரீதியான தீர்வைத் தவிர வேறு வழியில்லை என்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். இந்த பேட்டியைத் தொடர்ந்து வெளிநாட்டு, உள்ளூர் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுக்கும், செய்தி நிறுவனங்களுக்கும் பேட்டி அல்லது தகவல் அறிக்கைகளை வழங்கக்கூடாது என்று மேஜர் டென்சில் ஹொப்பேக்கடுவாவிற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. சிறிலங்கா இராணுவத்திலுள்ள ஏனைய உயர்மட்ட அதிகாரிகளுக்கும் இத்தகையான ஒரு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது இப்படியிருக்க, எந்த ஒரு சிறிலங்கா உயர்மட்ட இராணுவ அதிகாரிகளின் பேட்டிகளுக்கும், பத்திரிகைச் செய்திக் குறிப்புகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டாமென்று எச்சரிக்கை வடிவிலானபணிப்புரையை அரசாங்கம் கொழும்புப் பத்திரிகைகளுக்கு வழங்கியுள்ளது.

**அதிரடிப்படை**

பில்இருவர்வீரமரணமடைந்ததாகவும் புலிகளின் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தமோதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

★ எச். கே 53ரக எல். எம். ஜி- (ஜீ.3 எல்.எம்.ஜி) -1
★ மகசின் - 6
★ கோல் கொமாண்டோ - 1
★ மகசின் - 13
★ எஸ். எல். ஆர். - 1
★ மகசின் - 1
★ தொலைத் தொடர்புக்கருவி - 1
★ நேட்டோரவைகள் - 140
★ 5,5ரவைகள் - 300

அதேவேளை இந்தச்சம்பவத்தில் ஒரு அதிகாரி உட்பட எட்டுஅதிரடிப்படையினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்புவட்டாரங்கள் அறிவித்தமைதெரிந்ததே.

# பங்களாதேஷில் ஜனாதிபதியாக உயர்நீதிமன்ற நீதியரசர்

(டாக்கா)

பங்களாதேஷின் புதிய ஜனாதிபதியாக திரு. சகாபுதீன் அகமட் தெரிவு செய்யப்பட்டுள்ளார். முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியான திரு சகாபுதீன் அகமட் அவர்களை பங்களாதேஷின் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்துள்ளன. 1971 இல் பாகிஸ்தானிடமிருந்து விடுதலை பெற்றது முதல் மாறிமாறி இராணுவ புரட்சிகள் மூலம் ஆட்சிமாற்றங்கள் ஏற்பட்டுவந்தபங்களாதேஷில் 1982இல் இராணுவப் புரட்சிமூலம் பதவிக்கு வந்த ஜெனரல் எர்சாத் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நேற்றிரவு பதவி விலகுவதாக அறிவித்தது தெரிந்ததே.

ஜெனரல் எர்சாட்டின் முடிவு குறித்து பங்களாதேஷ் முழுவதும் மகிழ்ச்சி ஆரவாரத்தில் மூழ்கியுள்ளது: 1971ல் விடுதலை பெற்ற போது கொண்டாடப்பட்டதைப் போன்ற மகிழ்ச்சி டாக்காவிலும் ஏனைய நகரங்களிலும் நிலவுவதாக தெரிகிறது.

டாக்கா பல்கலைக்கழக மாணவர்களும், விரிவுரையாளர்களும் ஜெனரல் எர்சாட்டும் அவரது எடுபிடிகளும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்படல் வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## சிறு மாற்றம்

நேற்றைய பத்திரிகையில் உலக நாடுகளில் இருந்து சிறிலங்கா பெற்ற 4000 கோடி ரூபா பாதுகாப்பு நிதியெனக் குறிக்கப்பட்டுவிட்டது. அது "இலங்கைக்கு உதவும் உலக நாடுகளிலிருந்து 4000 கோடி ரூபாவை கடனாக பெற்றுள்ளது. அதேவேளை பெருந்தொகையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது" என்றே இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

## நாய்கள் சுற்றிவளைப்பு

(யாழ்ப்பாணம்)

தெருக்களில் கட்டாக்காலிகளாகச் சுற்றிக்கொண்டிருந்த தெருநாய்கள் நேற்று சுற்றிவளைப்புக்குள்ளாயின.

யாழ். மாநகர சபை ஊழியர்கள் இந்தச் சுற்றிவளைப்பைக் கச்சிதமாகச் செய்து முடித்தனர். இந்தச் சுற்றிவளைப்பிலிருந்து தப்பமுயன்ற நாய்கள் அந்த இடத்திலேயே அடித்துக் கொல்லப்பட்டு வண்டில்களில் ஏற்றிச்செல்லப்பட்டன.

நாய்களை ஒழிக்கும் விடயம் பற்றி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## முல்லைக்கு 70 மெற். தொன் உரம் வருகிறது

(மாங்குளம்)

முல்லைத்தீவு விவசாயிகளின் நன்மை கருதி யூரியா தவிர்ந்த அமோனியம் மற்றும் ஏனைய பசளைகள் லொறிகள் மூலம் கொண்டுவர ஏற்பாடாகியுள்ளது

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே பொன்னம்பலம் எடுத்த முயற்சியால் 70 மெற்றிக் தொன் கொண்ட பசளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிகள் மூலமாக இங்கு வந்தடையவுள்ளன.

இப்பசளையை வவுனியாவிலிருந்து சிறுவர் பராமரிப்பு நிதியம் எடுத்துவரவுள்ளது. இப்பசளைகள் விவசாயிகளுக்கு கட்டுப்பாட்டு விலையில் சங்கங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன.

## வேலை பெற்றுக் கொடுக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவில் பயிற்சி பெற்று வேலையின்றி இருப்போருக்கு வேலைவாய்ப்புப்பெற்றுக்கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

இப்பிரிவில் பயிற்சிபெற்றுத் தற்போது வேலையின்றி இருப்போர் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவுடன் தொடர்பு கொண்டால் அவர்களுக்கு வேலை வாய்ப்பைப்பெற்றுக் கொடுக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு முறைசாராக் கல்விப் பிரிவுக் கல்வி அதிகாரி எஸ். சுப்பிரமணியம் தெரிவித்தார். (க)

## அகதிகளுக்கு குடில்கள் அமைப்பு

இராணுவ நடவடிக்கை காரணமாக ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனை பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து சுருவிலில் தங்கியுள்ள அகதிகளுக்கு 36,000 ரூபா செலவில் குடில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஊர்காவற்றுறைப் பங்குத் தந்தை வண. எஸ். எப். கிருபானந்தன் அடிகள் யாழ். மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தின்உதவிபெற்று அகதிகள்தற்காலிகமாகத் தங்குவதற்கான குடில்களை அமைத்து வருகிறார். (21)

## அகதியாகப் போக நாடில்லையாம்

(கொழும்பு)

ஆளும் கட்சி எம். பி யான டாக்டர் பி. எம். பி. சிறில் வரவு செலவு திட்ட விவாதத்தில் பாராளுமன்றத்தில் பேசும்போது தமிழர்களுக்கு ஏதும் நடந்தால் அகதிகளாகப் போக நாடு உள்ளது. சிங்களவருக்கு ஏதும் நடந்தால் தஞ்சம் கோரிப்போவதற்கு அவர்களுக்கென்று ஒரு நாடு இல்லாத விபரீதமான நிலை உள்ளது என்றார்.

## பாரதிதாசன் நூல்கள் அரசுடமை

(சென்னை)

பாவேந்தர் பாரதிதாசனின் நூல்கள் நேற்று முதல் தமிழக அரசின் உரிமையாக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டு நவம்பரில் இந் நூல்கள் நாட்டுடமையாக்கப்படும். இதே வேளை பாரதிதாசனின் குடும்பத்துக்குத் தமிழக அரசு ரூபா எட்டுலட்சம் நிதி வழங்கவுள்ளது. இத் தகவலை நேற்றுச் சென்னையில்முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

## அல்லைப்பிட்டியில் தனியார் வீட்டில் பாடசாலை

(வேலணை)

யாழ். கோட்டையினை பிடித்துக்கொள்ளும் நோக்குடன் ஊர்காவற்றுறை ஊடாக மண்டைதீவு, அல்லைப்பிட்டி பகுதிக்குச் சென்ற சிறிலங்கா அரசின் ஆயுதப்படையினர் அல்லைப்பிட்டியில் உள்ள பராசக்தி வித்தியாசாலையினை முற்றாகத் தரை மட்டமாக்கிவிட்டுச்சென்றுள்ளனர்

இவ்வாறு சிரழிக்கப்பட்ட பாடசாலையில் கல்விகற்று வந்த மாணவர்களின் கல்வி பாதிக்காத வகையில் இருப்பதற்காக மேற்படி பாடசாலையின் அபிவிருத்தி சபையினர் தனியாருக்குச் சொந்தமான வீடொன்றை எடுத்து அந்த வீட்டில் பாடசாலையினை நடாத்திவருகின்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.